வாக்குமூலம்

உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். CC 577/2020

வழக்குசாட்சி LW10/PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபிநாத், காவல் ஆய்வாளர், செங்குன்றம் போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு | ஜாதி | |
| கணவர்/தந்தை | வேம்புளி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 55 |

தேதி 10.06.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது செங்குன்றம் போக்குவரத்து புலனாய்வுப் பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவேன். கடந்த 17.04.2018 அன்று மாதவரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக செல்வகுமார் பணிபுரிந்து வந்தபோது காலை 8 மணி திரு.குமரேசன் அளித்த புகாரினை பெற்று மாதவரம் காவல் நிலைய குற்ற எண். 218/2018 ஆக இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 336, 392, 397, 506(ii) கீழ் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்தார். மேற்படி புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ.1, 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் எதிரிகளை

தேடிவந்த நிலையில் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் குமரேசன், வசந்த், செந்தில்குமார், கார்த்திகேயன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தார். பின்னர் ஷாம், நீலகண்டன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். மேற்படி பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடமானது அ.,த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் ஷாம், நீலகண்டன் ஆகியோர்ளை விசாரணைச் செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுச் செய்தார். பின்னர் வழக்கு எதிரிகளை தேடிவந்த நிலையில் அன்று பகல் 02.05 மணிக்கு மாதவரம் தட்டான்குளம் ரோடு சந்திப்பு அருகே எதிரிகளை கைதுச் செய்து முதலாம் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ராமூர்த்தி, அசோக் முன்னிலையில் ஒப்புக்கொண்டதால் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலமானது பதிவு செய்தார். பின்னர் எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். பின்னர் எதிரி நீதிமன்றத்தில் பிணையம் பெற்று இந்நாள் வரை பிணையில் இருந்து வருகிறார்கள். கைப்பற்றுதல் மகஜரானது அ.த.சா.ஆ.5 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. இவ்வழக்கின் கோப்புகளை மேல் விசாரணைக்காக என்னிடம் ஒப்படைத்தார். நான் விசாரித்து இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 336, 392, 397, 506(ii) @ இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 336, 392, 506(ii) கீழ் பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

10 நாட்கள் காலதாமதமாக தான் எதிரிகள் கைதுச் செய்யப்பட்டனர் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் இல்லை. நான் மறுவிசாரணைச் செய்த பின்பு தான் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். ஒப்புதல், மகஜர் சாட்சிகள் மாதவரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம். தடய பொருட்கள் கைப்பற்றப்பட்டது நீதிமன்றத்தில் ஒப்படைவு செய்யப்படவில்லை

என்றால் சரிதான். சம்பவமே நடைபெறவில்லை என்றாலும் ஏற்கனவே குற்ற வழக்கில் எதிரிகள் இருந்து வருவதால் பொய்யாக வழக்கு பதிவுச் செய்து குற்ற இறுதி அறிக்கையானது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.